செ.வெ.எண்: 328/2016 நாள்: 03.06.2016

**பத்திரிகைசெய்தி**

**கன்னியாகுமரிமாவட்டத்தில் அரசு இ-சேவைமையங்களின் மூலமாக**

**மின்கட்டணம் செலுத்தவழிவகைசெய்யப்பட்டுள்ளது.**

**மாவட்டஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான், இ.ஆ.ப.,தகவல்**

******

கன்னியாகுமரி மாவட்டத்தில் மின் ஆளுமைத் சங்கம் மூலமாக மொத்தம் 156 அரசு இ-சேவை மையங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் 8 மையங்கள் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மூலமாக வட்டாட்சியர் அலுவலகங்களிலும் 8 மையங்கள் தமிழ்நாடு மின்னனு நிறுவனம் மூலமாக மாவட்டஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் இதர இடங்களில் செய்லபட்டு வருகின்றன. இது தவிர கிராம ஊராட்சிகளில் 140 மையங்கள் வேளாண்மை கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் மூலமாகவும் சேவைகள் வழங்கி வருகின்றன. இச்சேவை மையங்கள் மூலமாக வருவாய்த்துறை சான்றிதழ்கள் சமூக நலத்துறை திருமணநிதி உதவிதிட்டம் போன்ற பல்வேறு சேவைகள் வழங்கப்பட்டுவருகின்றன.

தங்போது அரசு இ-சேவை மையங்களின் மூலமாக மின் கட்டணமும் செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக நுகர்வோர் மின் கட்டணம் செலுத்த மின்சாரவாரிய அலுவலகங்களுக்கு நீண்ட தூரம் செல்லாது தங்களது இல்லத்திற்கு அருகாமையில் உள்ளஅரசு இ-சேவை மையத்தின் சேவையை பயன்படுத்தி தங்களது மின்கட்டணத்தை செலுத்தலாம்.

பொதுமக்கள் மேற்கண்ட அரசு இ-சேவை மையங்களை மின்கட்டணம் செலுத்த பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மாவட்டஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரிமாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.